NA

SINGAPORE – CAMBRIDGE
General Certificate of Education Normal (Academic) Level

# தமிழ்

**1198/3**

தாள் 3

## ORAL EXAMINATION

**TAMIL**
Paper 3

**SPECIMEN PAPER**

*With effect from 2024 examination*

குறிப்புகள்:

1. வாய்மொழித் தேர்வு பின்வரும் இரு பகுதிகளை உள்ளடக்கியது:

    - **பகுதி 1 - வாய்விட்டு வாசித்தல்**
      நீ ஒரு பனுவலை வாய்விட்டு வாசிக்க வேண்டும்.

    - **பகுதி 2 - ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல்**
      நீ ஓர் ஒளிக்காட்சியைப் பார்க்க வேண்டும். அதன் பின்னர், தேர்வாளர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட வேண்டும்.

2. நீ **'Start'** என்பதை கிளிக் செய்ததும், பனுவலை மனத்திற்குள் படித்துக்கொள்வதற்கும் ஒளிக்காட்சியைப் பார்த்துக்கொள்வதற்கும் உனக்கு 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

Singapore Examinations and Assessment Board

©MOE

# 2024 சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ்
# வழக்கநிலை (ஏட்டுக்கல்வி)
# தமிழ் வாய்மொழித் தேர்வு (1198/3)

---

பகுதி 1: வாய்விட்டு வாசித்தல்

ஒரு கிராமமே மாயமாய் மறைந்துவிட்டதைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அப்படி ஒரு சம்பவம் சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்துள்ளது. கனடா நாட்டிலுள்ள கிராமம் ஒன்றில் வாழ்ந்து வந்த ஏறத்தாழ ஈராயிரம் பேர் மாயமாய் மறைந்துவிட்டார்கள்.

பொறி வைத்து விலங்குகளைப் பிடிக்கும் தொழிலை மேற்கொண்டிருந்த ஒருவர் வழக்கம்போல் அந்தக் கிராமத்திற்குச் சென்றிருந்தார். அப்போது அங்கு யாரும் இல்லாததைக் கண்டு அவர் குழம்பினார். வீட்டுக்கதவுகள் திறந்து கிடந்ததோடு சமைத்த உணவுவகைகளும் அப்படியே இருந்தன. அதனால், அந்தக் கிராமத்து மக்களுக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டிருக்கலாம் என்பதை அவர் உணர்ந்தார். அவர் காவலர்களுக்கு இதைப் பற்றித் தெரிவித்தார். அவர்களும் அக்கிராமத்து மக்களை வலைவீசித் தேடினார்கள். ஆனால், அம்மக்களுக்கு என்ன நடந்தது, அவர்கள் எங்கே போனார்கள் முதலான கேள்விகளுக்கு அவர்களால் பதில் காண முடியவில்லை. இன்றுவரை இது மர்மமாகவே இருந்து வருகிறது.

**2024 சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ்**
**வழக்கநிலை (ஏட்டுக்கல்வி)**
**தமிழ் வாய்மொழித் தேர்வு (1198/3)**

(வாய்மொழித் தேர்வாளர் பயன்பாட்டுக்கு மட்டும்)

---

பகுதி 2: ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல்

தூண்டுதல் வினாக்கள்:

1. ஒளிக்காட்சியில் காண்பதுபோல, உணவு சாப்பிடக்கூடிய இடங்களுக்கு நீ போனால், அங்கே நீ என்ன பார்ப்பாய்?

2. சிங்கப்பூரர்கள் வெளியில் போய்ச் சாப்பிட விரும்புகிறார்கள். அது ஏன் என்று நீ நினைக்கிறாய்?

3. உணவு நிலையங்களில் சாப்பிடும்போது அது மகிழ்ச்சிகரமான அனுபவமாக அமைய, உணவு நிலையங்கள் என்ன செய்யலாம்?

**BLANK PAGE**

*Copyright Acknowledgements:*

The Singapore Examinations and Assessment Board has made every effort to trace copyright holders, but if we have inadvertently overlooked any, we will be pleased to make the necessary arrangements at the first opportunity.